# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:47** **தேதி:26.06.2015**

**TTAக்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வும் மற்றும் சில செய்திகளும்….**

அன்பார்ந்த தோழர்களே,

24.06.2015 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS அவர்களும் DIRECTOR (HR) திரு A.N. ராய் அவர்களை சந்தித்து BSNL இயக்குனர்கள் முன் நிலுவையில் உள்ள ஊழியர்கள் பிரச்சனை தொடர்பாக விவாதித்தனர்.

1. 01.01.2007 அன்றோ அதற்கு பின்னரோ பணியமர்த்தப்பட்ட TTAக்களுக்கு அவர்களின் ஊதிய இழப்பை ஈடுகட்ட ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்க 19.06.2015 அன்று கூடிய இயக்குனர் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதாக DIRECTOR (HR) தெரிவித்தார். மேலும், JTO தேர்வு விதிகள் மாற்றம், E1 ஊதிய விகிதம் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு இயக்குனர் குழு ஒப்புதல் வழங்கவில்லை, ஆனால் அவை 'RENUMERATIONS COMMITTEE"க்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். அதற்கு தங்களின் ஆழ்ந்த எதிர்ப்பை நமது தோழர்கள் தெரிவித்தனர். (RENUMERATIONS COMMITTEE என்றால் என்ன? அந்தக் கமிட்டி DOTயில் உள்ள இயக்குனர்களையும், இயக்குனர்களாக உள்ள வெளி ஆட்களையும் கொண்ட கமிட்டி. இவர்கள் தனியாக அமர்ந்து BSNLல் இருக்கும் இயக்குனர்கள் கொடுத்துள்ள பரிந்துரைகளை ஏற்று கொள்வதா இல்லையா? என முடிவெடுப்பார்கள். இது BSNLல் உள்ள இயக்குனர்களால் இயக்குனர் குழுவிற்கு கொண்டு வரப்படும் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், அதனை நிராகரிக்க முடியும். இது BSNLன் இயக்குனர்கள் பலம் என்பது பூஜ்யம் என்பதே இதன் பொருள்).
2. CGMகளுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு முன் நிராகரிக்கப்பட்ட தகுதியான கருணை அடிப்படையிலான பணி நியமன கோரிக்கைகள் மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும் என கோரப்பட்டது.
3. கேரள மாநிலத்தில் சிவில் பகுதி இணைப்பை கைவிட வேண்டுமென கோரப்பட்டது.
4. மேலும், PLI கமிட்டி மற்றும் கேடர் பெயர் மாற்றும் கமிட்டி ஆகியவை நீண்ட நாட்களாக கூடாமல் உள்ளதையும் சுட்டிக்காட்டினர்.

மேற்கூறிய அனைத்து பிரச்சனைகளிலும் தேவையானவற்றை செய்வதாக DIRECTOR(HR) உறுதி அளித்தார்.

**GPF அட்வான்சை WITHDRAWALஆக மாற்றுவது:-** ERP அறிமுகப்படுத்தப்பட்ட பின் ERPயில் அந்த வசதி செய்து தரப்படவில்லை என்பதால் ஊழியர்கள் தங்களின் GPF ADVANCEஐ WITHDRAWAL ஆக மாற்றிக் கொள்ள இயலவில்லை. இந்த பிரச்சனைய BSNL ஊழியர் சங்கம் GM(ERP)யிட விவாதித்து இருந்தது. 25.06.2015 அன்று நமது பொதுசெயலாளர் தோழர்

P.அபிமன்யு அவர்கள் மீண்டும் திரு ராமன் அகர்வால் அபிமன்யு அவர்கள் மீண்டும் காசியாபாத்தில் உள்ள திரு ராமன் அகர்வால் GM(ERP) அவர்களை சந்தித்து உடனடியாக தீர்வு காண வேண்டும் என கேட்டுக் கொண்டார். விரைவில் ஆவன செய்வதாக அவர் உறுதி அளித்தார்.

**FORUM தலைவர்களை சந்திக்க DOT செயலரும் கூடுதல் செயலரும் மறுப்பு:-** FORUM மற்றும் DOT செயலருடன் 01.05.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வழங்கப்பட்ட உறுதி மொழிகளை பரிசீலிக்க ஒரு சந்திப்பு தேவை என FORUM அமைப்பாளர் 08.06.2015 அன்று DOT செயலருக்கு ஒரு கடிதம் கொடுத்திருந்தார். ஆனால் இது வரை எந்த பதிலும் தரப்படவில்லை. 25.06.2015 அன்று FORUM அமைப்பாளர் DOT செயலரை சந்திக்க சென்றபோது, அவர் கூடுதல் செயலரை சந்திக்க கூறினார். ஆனால் கூடுதல் செயலரோ இந்த சூழ்நிலையில், FORUMத்துடன் எந்த விவாதமும் தேவையில்லை என மறுத்துள்ளார். BSNL ஊழியர்கள் ஒட்டு மொத்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு 2 மாதங்கள் கடந்து விட்டது. கோரிக்கைகளில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாதது மட்டுமல்ல, DOTயின் உயர் அதிகாரிகள் FORUM தலைவர்களை சந்திக்கக் கூட தயாராக இல்லை. அவர்கள் கொடுத்த உறுதி மொழிகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கூறுவதற்கு பதில் ஏதும் இல்லாததே இதற்கு காரணம். 26.06.2015 அன்று நடைபெற உள்ள FORUM கூட்டம் இது தொடர்பாக விவாதித்து பொறுத்தமான முடிவு எடுக்கும்.

**ரயில்வே தனியார் மயமாக்கலை எதிர்த்து 30.06.2015 அன்று ஆர்ப்பாட்டம்:-**
நரேந்திரமோடி அரசாங்கம் அமைத்த பிபேக் தேப்ராய் கமிட்டி ரயில்வேயை தனியார் மயமாக்க தனது ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இந்த அறிக்கைக்கு எதிராக ஜூன் 30ஆம் தேதியை “கருப்பு தினம்” என கடைபிடிப்பது என ரயில்வே தொழிற்சங்கங்கள் முடிவெடுத்துள்ளது. ரயில்வே துறையை தனியார் மயமாக்குவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என டல்ஹௌசி மத்திய செயற்குழு அறைகூவல் விட்டுள்ளது. எனவே BSNL ஊழியர் சங்கத்தின் கிளை மற்றும் மாவட்ட சங்கங்கள் ஜூன் 30ஆம் தேதி ரயில்வே துறையை தனியார்மயமாக்குவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**